(2) நடைமுறைக் கேள்வி

(அ) அவையுரிமைப் பிரச்சினையைக் கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக எடுத்துக்கொள்வது குறித்து.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, on a point of order. Under Rule 186, 'a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon :

Provided that a matter of privilege arising........................ during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.'

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவைத் தலைவரிடம் இரண்டு உரிமைப் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறேன், நம்முடைய விதிமுறைகளின்படி, ஒன்று 'நவமணி' பத்திரிகையின்மீது. இரண்டாவது, 'முதலமைச்சர்' மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அதைப்பற்றி நான் சொல்கிறேன், வேறல்ல. உரிமைப் பிரச்னைகளைத் தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். கேள்விகள் முடிந்து, மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் உரிமைப் பிரச்னையைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நீங்கள் தீர்ப்பு சொல்ல ஆரம்பித்தீர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இது முன்னால் எழுப்பப் பட்ட பிரச்னையின் மீதான தீர்ப்பு.

(3) அவையுரிமைப் பிரச்சினைகள்.

(அ) அறநிலையத் துறை அமைச்சர் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்ததாகக் கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் இப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். 21—11—1973